# வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்
## (துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு)

## பதவி வெற்றிடம்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பிரஜாவுரிமை பெற்ற உரிய தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ள பொருத்தமான விண்ணப்பதாரிகளை பின்வரும் பதவிக்கான ஆட்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## <u>குறித்துரைக்கப்பட்ட கரையோர பணிநிலை உத்தியோகத்தர் பதவி</u> – நிலையான கால ஒப்பந்த அடிப்படை (01 வெற்றிடம்)

**<u>தகைமைகள்</u>:-** வகுப்பு-I உடன் கூடிய முதுமாணி தகுதிச் சான்றிதழ் (COC)

குறைந்தது 03 வருடம் கடலில் பிரயாணித்த அனுபவத்தினை (மொத்தச் சரக்கு கப்பல்களிலான அனுபவம் விரும்பத்தக்கது) கொண்ட கடலியல் வல்லுநர்

**அனுபவம்:-** அங்கீகரிக்கப்பட்ட கப்பல் உடமை மற்றும் தொழிற்பாட்டுக் கம்பனியொன்றின் குறித்துரைக்கப்பட்ட கரையோர பணிநிலை உத்தியோகத்தர் ஒருவராக குறைந்தது 01 வருட அனுபவம்

**சம்பளம்:-** தற்போதய அரசாங்க சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வாகனம் மற்றும் எரிபொருள் படிகளுடன் சேர்த்து 450,000/- ரூபா கொண்ட மாதாந்தப் படி

**<u>தொழில் விவரணம்</u>**

**பொறுப்புக்கள்:**

- கம்பனியின் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையினை (SMS) தொடர்பாடல் செய்தலும் பயனுறுதி வாய்ந்த விதத்தில் நடைமுறைப்படுத்தலும்.
- தொழில்நுட்ப திணைக்களத்துடன் உலாவுதலைச் செய்து இந்நிறுவனத்தின் அதிபதிகளுடனும் (Masters) முகாமையுடனும் விடயங்களை ஆலோசித்து ஒருங்கிணைப்புச் செய்தல்.
- தொழில்நுட்ப திணைக்களத்தின் தலைவருடன் உலாவுதலைச் செய்து சகல CSC கப்பல்களினதும் கரையோர அடிப்படை மற்றும் கப்பல் இரண்டிலும் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையினை (SMS) / உள்ளக கணக்காய்வினை நடைமுறைப்படுத்தல்.
- பல்வேறுபட்ட கப்பல் பதிவுகளை அடிக்கடி சோதிப்பதன் மூலம் கப்பல் தொழிற்பாடுகளைக் கண்காணித்தல்.
- கப்பலில் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையினை (SMS) கண்காணித்து தரமுயர்த்துவதையும் அத்துடன் கப்பல் பதிவுகளைத் தொடர்வதையும் உறுதிப்படுத்தல்.
- சகல நியதிச்சட்ட மற்றும் வகைப்பாட்டு அமைப்பு ஆய்வுகளை உரிய நேரத்தில் கட்டளையிடுதலும் மேற்கொள்தலும்.
- போதுமான வளங்களும் கரையோரத்தை அடிப்படையாகக் கொண்ட ஆதரவும் வழங்கப்படுவதையும் திருத்த வேலைகள் மற்றும் உதிரிப்பாகங்களுக்கான பெறுகையையும் உறுதிப்படுத்தல்.
- தொடர்ச்சியான கண்காணிப்பு, விசேடமாக பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையின் (SMS) பயனுறுதித்தன்மை பற்றி DPA மதிப்பீடு மற்றும் மீளாய்வு என்பவற்றுக்கான தொலைதூரக் கண்காணிப்பு.
- கப்பல் பணியாளர்களின் இணக்கமின்மைகள், விபத்துக்கள் மற்றும் அனர்த்த நிகழ்வுகள் பற்றி புலன் விசாரணை செய்தல், அறிக்கையிடல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.
- முகாமைத்துவ மீளாய்வுக் கூட்டங்களை ஒழுங்கு செய்தலும் ஒருங்கிணைப்புச் செய்தலும் அத்துடன் அவை பற்றிய பதிவுகளை வைத்திருத்தலும்.

- IMO தேவைப்பாடுகளுடன் இணக்கமாக மிக அண்மைய வழிகாட்டல்களுக்கு இணங்க உரிய அதிகார பீடங்களினால் தேவைப்படுத்தப்படுமாயின் மேலதிக கைந்நூல்களைத் தயாரித்தல்.

- அவசர நிலமைகளை உள்ளடக்கி கப்பல் / கரையோர எதிர்பாரா நிகழ்வுத் திட்டங்களைத் தயாரித்தலும் மீளாய்வு செய்தலும்.

- கடல்சார் கப்பல் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் கொள்கைகளானவை சர்வதேச ஒழுங்கு விதிகளுக்கிணங்க இணக்கமுறுவதை உறுதிப்படுத்தல்.

- தொழில்நுட்ப திணைக்களத்தின் தலைவருடனும் CH & A திணைக்களத்துடனும் ஒருங்கிணந்து அதிபதிகளுக்கு (Masters) கடற்பயண அறிவுறுத்தல்களை வழங்குதல்.

- வெளிநாட்டு துறைமுக முகவர்களின் நியமனங்களில் ஆலோசனை வழங்குதல்.

**வயதெல்லை :** 35 வயதிற்கு குறையாமலும் 60 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை :** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம்.

**இதர நன்மைகள்**

1. ஊழியர் சேமலாப நிதியம் (E.P.F), ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (E.T.F) என்பவற்றுக்கான பங்களிப்பு.
2. உட்புற மற்றும் வெளிப்புற சிகிச்சைகளுக்கான சத்திர சிகிச்சை மற்றும் வைத்தியசாலைசார் காப்பீடு.
3. முழுமையான தனிநபர் விபத்துக் காப்புறுதிக் காப்பீடு.
4. தொடர்பாடல் செலவுகளை மீளளித்தல்.

**பொது அறிவுறுத்தல்கள்:**

- பிறப்புச் சான்றிதழ், உரிய ஏனைய சான்றிதழ்கள் மற்றும் உறவுமுறை சாராத இரு தொடர்பாளர்களின் முகவரிகள் என்பவற்றுடன் சேர்த்து உண்மைப் பிரதியென விண்ணப்பதாரியினால் சான்றுப்படுத்தப்பட்ட கல்வி/ தொழில் சான்றிதழ்களின் பிரதிகளுடன் ஒன்றிணைந்த சகல விண்ணப்பங்களும் **விளம்பரப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள்** வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் (CSCL) தலைவரிடம் சென்றடைவதற்கு பதிவுத் தபால் மூலம் அல்லது chairman@cscl.lk / hr@cscl.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- தயவு செய்து விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுக.
- அரச துறை நிறுவனங்களின் ஊழியர்களின் விண்ணப்பங்களானவை உரிய நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- காலம் பிந்திய மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழுவொன்றின் மூலம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றில் விண்ணப்பதாரிகள் மதிப்பிடப்படுவர் என்பதை தயவு கூர்ந்து கவனத்திற் கொள்க.

மேற்போந்த தேவைப்பாடுகளுடன் இணக்கமற்றிருத்தலானது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு வழிகோலும். எவ்வழியிலும் செல்வாக்கைப் பிரயோகித்தலானது தகைமையிழப்பாக அமையும்.

---

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்,**
**இல: 27, MICH கட்டடம்,**
**சேர் ராஷிக் பரீட் மாவத்தை, (பிறிஸ்டல் வீதி)**
**கொழும்பு 01.**

**மேலதிக விபரங்களுக்கு; (+94) 011 2394624, விரிவு. 218 - சட்டம் / காப்புறுதி மற்றும் மனிதவளத் திணைக்களம்**